விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 8 ஜுலைஜ் 7 இதழ் 193
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-8-1985

வவனியா, திருகோணமலையில் நடந்த

## இராணுவத் தாக்குதல்: ராஜீவிடம் மகஜர்

(சென்னை)

"வவனியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தினர், அப்பாவித் தமிழர்கள் மீது நடத்திவரும் தாக்குதல்குறித்து ஈழ தேசிய விடுதலை முன்னணியினர் விரிவான மகஜர் ஒன்றை இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியிடம் சமர்ப்பிப்பார்கள் என்று முன்னணியின் பிரமுகர் திரு. ஏ. எஸ். பாலசிங்கம் சென்னையில் நேற்றுக் கூறினார்.

பேச்சுக்களுக்கு ஒரு அடிப்படையாக தமிழர்களுக்கு ஏற்புடையயோசனைகளை இலங்கை அரசிடம் இந்திய அரசு வலியுறுத்தவேண்டும் என்றும்; அப்போதுதான் திம்பு பேச்சுகளில் தொடர்ந்து கலந்து கொள்வது சாத்தியமாகுமென்றும் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் ஈழ தேசியவிடுதலை முன்னணியினர் எடுத்துரைக்க உள்ளதாகவும் திரு.பாலசிங்கம் தெரிவித்தார்.

● மீண்டும் பேச்சுவார்த்தை:இந்தியா பகிரதப்பிரயத்தனம்!

# இடைக்கால உடன்பாட்டுக்கு பிரதமர் ராஜீவ் நேரடி முயற்சி!

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான திம்பு பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா பகிரதப் பிரயத்தனம் மேற்கொண்டிருப்பதாகவும், இவ்விஷயத்தில் இந்தியப்பிரதமர் திரு ராஜீவ்காந்தி நேரடியாகவே ஈடுபட்டுள்ளார் என்றும் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

சமரசப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பமாகாவிட்டாலும், தமிழர் பிரதிநிதிகள் குழுவுக்கும் இலங்கை அரசு தரப்பினருக்குமிடையே ஒரு இடைக்கால உடன்பாட்டையாவது அமுலுக்குக் கொண்டுவருவதில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக புதுடில்லியிலிருந்து நேற்றிரவு வெளியான தகவல்கள் நம்பிக்கை தெரிவித்தன.

பூட்டான் தலைநகர் திம்புவில் இருந்து இருதரப்பினரும் வெளியேறிவிட்டபோதிலும்; இருதரப்பினரும் மீண்டும் சந்திக்கக்கூடிய வாய்ப்புகள், புதுடில்லியில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் இப்பொழுது புதுடில்லியில் இருக்கிறார்.

இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகள் குழுத்தலைவர் கலாநிதி ஹெக்டர் ஜெயவர்த்தனா இப்பொழுது புதுடில்லியில் இருக்கிறார். நேற்று இரவு அவர், இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

தமிழர் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களை புதுடில்லி வருமாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி விடுத்த

(5ம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஆண்டு பட்ஜட் துண்டுவிழும் தொகை: 3 200 கோடி ரூபா!

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் [பட்ஜட் மூவாயிரத்து இருநூறு கோடி ரூபா துண்டு விழும் என்று நிதி அமைச்சர் திரு. ரொனி டிமெல் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலை மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. (ரா)

## "தமிழ்பகுதியில் சர்வதேச அமைதிப்படையைநிறுத்துக"

### ராஜீவுக்கு குமரிஅனந்தன் தந்தி

(சென்னை)

"இலங்கையில் தமிழர் வாழும்பகுதிகளில்நிலைகொண்டுள்ள சிங்கள இராணுவத்தை உடனடியாக வாபஸ் பெறுவதுடன்; அங்கு சர்வதேச அமைதிப்படையை நிறுத்த வேண்டும்' என்று காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையில் உடனடியாகச் சமஷ்டி அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதாக இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்தால் அன்றி திம்பு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடர வேண்டாம்" என்றும் அவர் அத்தந்தியில் கேட்டுள்ளார். [ரா]

## கண்ணி வெடி பொலிஸார் பலி!

(வாழைச்சேனை)

வாழைச்சேனை வந்தாறுமூலை வீதியில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் ஜீப்வண்டியில்சென்ற அதரடி பிரிவுப் பொலிசார் பலியானதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இக்கண்ணி வெடிச் சம்பவம் இடம் பெற்றது

## பரந்தனில் 6 இளைஞர் கைது!

### ஒருவர் மரணமானார்!

(கிளிநொச்சி)

பரந்தன் பகுதியில் சிவில் உடையில் சென்ற ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களுள் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மற்றைய 5 இளைஞர்களுக்கும் இயக்கங்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது

(5-ம் பக்கம் பார்க்க)

## நயினாதீவு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு - குறிகட்டுவான் படகுச் சேவை நேற்று வழமைக்குத் திரும்பியுள்ளது (மா)

## 'தமிழ்ஈழம் தவிர்ந்த எதுவுமே பிரச்னையைத் தீர்க்காது'

(யாழ்ப்பாணம்)

"தமிழ் ஈழம் தவிர்ந்த மாற்றுத் தீர்வு எதுவுமே எப்பிரச்னையைத் தீர்க்கப்போவதில்லை. எனவே மாற்றுத் தீர்வு எதனையும் நாம் முன்வைக்கத் தயாராக இல்லை. நிர்ப்பந்திக்கும் அந்நிய சக்திகளின் நெருக்குவாரத்தை உடைத்தெறியத் தயங்கமாட்டோம்"

தமிழ் ஈழ விடுதலை இயக்க அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"இதுவரை தமிழ் ஈழப் போராளிகளால் கொடுக்கப்பட்ட நேரடி நெருக்குவாரங்களினாலும், சர்வதேசமயப்பட்ட பிரசார வடிவங்களினாலும் அரசியல், பொருளாதார ரீதியில் வலுவிழந்துகொண்டிருக்கின்ற ஸ்ரீ லங்கா தரகு முதலாளித்துவ அரசும்; அதன் எஜமானர்களும் போராட்

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்றத்தில் மீண்டும் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினமிரவு மீண்டும் பல பொருட்கள் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத 12 பேர் துப்பாக்கிகளுடன் வந்து அங்கு கடமையாற்றிய 3 காவலாளிகளைப் பயமுறுத்திவிட்டு இக் கொள்ளையை நடத்தியதாகக்

(5-ம் பக்கம் பார்க்க)


யாழ். குடாநாட்டின் சகல தனியார் புகைப்படப்பிடிப்பாளர்களுக்கும், படப்பிடிப்பு நிலையங்களுக்கும்

ஓர் நற்செய்தி

புகைப்படம் எடுப்பதற்கும், படச் சுருள்களை பிரதியாக்கம் செய்வதற்கும், வேண்டிய சகலவிதமான "அக்பா" (AGFA) பொருட்களுக்கான ஏக விநியோகஸ்தராகவும். கலர்ப் படச் சுருள்களை "கொம்பியூட்டர்" (COMPUTER) மூலம் மிகவும் குறுகிய காலத்தில் பிரதியாக்கம் PROCESSING and PRINTING) செய்யும் பொருட்டு அவற்றைச் சேகரிக்கும் எமது முகவராகவும். 'ஜெயா போட்டோஸ் எண்டபிரைசஸ்" JEYA PHOTOS and ENTERPRISES) நிறுவனத்தை நியமிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்காணும் விலாசத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ளவும்.

53, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம். யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23382

Hayleys Limited,
PHOTOGRAPHIC.
PRODUCIS DEPT
25, FOSTER LANE,
Telephone- 91181

Agfa Lanka,
Processing Ltd.
COLOMBO-10.
(207)

# விளம்பரம்

## விற்பனைக்கு

வீடுகட்டுவதற்கும், தொழில் செய்யக்கூடியதுமான. கிணறு மதில் ஆகிய வசதிகளுடன் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு;- 84, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 203

---

வீட்டுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள். மற்றும் பலவித பாவனைப்பொருட்கள் அனைத்தும் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியிலிருந்து விற்பனை செய்யப்படும். இடம்: 187, மூன்றும் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 212

---

நல்ல இன வளர்ப்பு மீன்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. ஏஞ்சல். கோல்ட் பிஸ், நியோன், சனிகோ. பிளேட்டிஸ், பைட்டர்ஸ், டைகர் பாப்ஸ், இன்னும் பல இரத்தினவாசா, கருவேலடி ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு. 195

---

தஞ்சாவூர் புதிய வீணைகள் மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளன தொடர்பு: சி. கிருஷ்ணமூர்த்தி அகில இலங்கைத் திருமுறை மன்றம், 31/12 ,சங்கிலியன் வீதி, நல்லூர். 205

---

அராலி கிழக்கில் பனை மரங்களுடன் வீடு கட்ட உகந்ததுமான 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: A. C. செல்வராஜா, மில்லேன், மல்லாகம். 208

---

கோவில்களுக்கு தேவையான பெரியமணி, குத்துவிளக்கு, திருவாசி கிடாரம், குடம், சருவம், செம்பு, தீபம், தூபம், சரவிளக்கு, தாம்பாளம், ஃபுளவர்வாஸ், மெழுகு திரிஸ் ரேண்ட் வகைகள் மற்றும் அலுமினியம், பித்தளை எவர்சில்வர் அன்பளிப்பு பொருட்கள் ஆகியவற்றுக்கு: ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோஸ், 26 B, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 202

---

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), பருத்தித்துறை 27/2092 இலக்க லொறிக்கு பொடி அடிப்பதற்கும், திருத்த வேலைகளுக்கும்

### கேள்விப் பத்திரம் கோரல்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் 27/2092 இலக்க இசுசு லொறிக்கு பொடி அடிப்பதற்கும், திருத்த வேலை செய்வதற்கும் இத்தால் கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. இதற்கு முற்பணமாக ரூபா 500/-வும், விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 10/-ம் சங்கத்திற்குக் கட்டி விண்ணப்பப் படிவத்தை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். அவ்விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து பதிவுத் தபால் மூலம் 10-9-85-ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். (பழைய விண்ணப்பங்கள் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது)

பொதுமுகாமையாளர்

1985-08-20. 200

## வைத்தியம்

மூலவியாதிகள், பாரிசவாதம், முழங்கால்வாதம் போன்ற வாதரோகங்களுக்கும் பீனிசம், எக்ஸிமா, சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப் பேற்றின்மை, குழந்தைகள் சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சித்த ஆயுர்வேத முறைப்படி விஷேசமான சிகிச்சை பெறலாம். Dr. மங்களாம்பிகை D,A.M , மங்களபதி வைத்தியசாலை, 41/5, அரசவீதி, சங்கிலியன்வீதி, நல்லூர். (4882

## தவறிவிட்டது

C 90 86 ஸ்ரீ 9881 இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் புங்குடுதீவு தபால் அலுவலகத்திற்கு முன்னால் 19 08-85 திங்கட்கிழமை தவறிவிட்டது. இதனைக் கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்: கு. இராசரெத்தினம். ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு-2. 199

## சேவை

வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள், தமிழ் ஆங்கில தட்டச்சு, ரோனியோ வேலைகள். அஞ்சல்வழி ஆங்கிலம், திருமண சேவை ஆகியனவற்றிற்கு-மல்ரிசேவிசஸ்: 37(351), மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி), யாழ்ப்பாணம். தொலைபேசி: 22762. 189

## தேவை

''வேப்பம் விதைகள், இலுப்பம் விதைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற், யாழ்ப்பாணம். 201

---

நல்ல இரசக் கொப்பரு 1 கிலோ 2/- ரூபாய்ப்படி கொள்வனவு செய்கிறோம். சி. எஸ். கே. மில் யாழ்ப்பாணம். 142

---

பலஇன கோழிகளும் இறைச்சிக்குத் தேவை. நியாய விலையுடன். நேரில் வந்தும் பெற்றுக்கொள்ளப்படும் ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 23131. 184

---

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பிரபல றேடியோ ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள TV-DECK மற்றும் சகல றேடியோக்களும் திருத்தக் கூடிய ரெக்னீஷன் தேவை. ஒரு வாரத்துக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 210, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 210

---

யாழ் நகரில் உள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு ஆங்கில, பெண் சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர் தேவை. ஆங்கிலத்தில் நல்ல அறிவும் சுருக்கெழுத்திலும் தட்டெழுத்திலும் சிறந்த தேர்ச்சியும், (தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 40 சொற்களுக்கு குறையாமல், சுருக்கெழுத்தில் நிமிடத்திற்கு 80 சொற்களுக்கு குறையாமல்) உடையவராய் இருத்தல் வேண்டும். 31-08-85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 198 மே/பா 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 198

---

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை (PRIMARY HEALTH CARE) செய்வதற்கு ஊக்கமிக்க, முயற்சியுள்ள ஒரு பட்டதாரி அல்லது அதற்கு சமமான தகுதியுள்ளவர் தேவை. சமூக/தொண்டர் சுகாதார வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சியும் கல்வியும் அளிப்பதும் ஒழுங்கு செய்வதும் வேலையில் அடங்கும். போஷாக்கு/சுகாதார அறிவுள்ளவர்கள் தகைமை கவனிக்கப்படும். இது ஒரு ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு நல்ல சம்பளத்துடன் அமையும். உடனே விண்ணப்பிக்கவும்:

பேராசிரியர் த. ராமதாஸ்,
குழந்தை வைத்தியத்துறை, அரசினர் வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (178)

---

உ

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் ஆவணித்திங்கள் 10-ம் நாள் (26-08-85) திங்கட்கிழமை முற்பகல் 8-00 மணி முதல் 9-30 மணி வரை உள்ள சுபவேளையில்

காலஞ்சென்ற ஓவசியர் S. நடராஜா அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **பொன்னம்பலம்** (கணக்காளர் - லண்டன்) அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **அபிராமசுந்தரி** அவர்களுக்கும்

யாழ். நாச்சிமார் அம்மன் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் குடும்பசமேதராய் கலந்து ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்:

திருமதி நே. நடராஜா,
வட்டு. மேற்கு.
வட்டுக்கோட்டை,

ப. இராசரெத்தினமும்
பாரியாரும்
35, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(155)

---

THE EXPRESS INSTITUTE KOPAY

## பதவி வெற்றிடம்

6-ம், 7-ம் வகுப்புகளுக்கு **ஆங்கிலம், சமூகக்கல்வி, விஞ்ஞானம்** கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் தேவை

கல்வித் தகைமைகள், கற்பித்தல் அனுபவங்கள் போன்றவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன்

**28-08-85 (புதன்)** காலை 9-30 மணிக்கு நேரில் வரவும்.

அதிபர்,
**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்,**
இருபாலை, கோப்பாய்.

---

## மேற்கு ஜேர்மன் பிரயாணம்.

**02-09-1985 செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

மற்றும் பிரான்ஸ், இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா பிரயாணங்கள் ஒழுங்குசெய்துதரப்படும்.

(மலேசியா செல்வதற்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.)

**லிப்ருஸ் லிமிட்டெட்**
(TRAVEL DEPARTMENT)
70, ஸ்ரான்லி வீதி (R. G. BUILDING),
யாழ்ப்பாணம்.

---

## 3-வது பிறந்த தின வாழ்த்து

கோபால் பிரதீப்
103, சட்டநாதர் வீதி. நல்லூர்

**"விஜி-கோ"**

உரிமையாளர் கோபால்தம்பதிகளின்செல்வப்புதல்வன் **பிரதீப்** தனது பிறந்ததினத்தை 1-9-85 ஞாயிற்றுக்கிழமை



அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா. அப்பம்மா. அம்மப்பா, அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார். அனலைதீவில் இருக்கும் பூட்டி, மற்றும் ஜெர்மனியில் இருக்கும் கப்பல்மாமா, குகன்மாமா, ராணி சித்தி, கமலா அத்தை, சைலைநாதன் குடும்பத்தினர், நடராஜா குடும்பத்தினர், தயாபரராசா, விஜி-கோ ஊழியர்கள், வட்டுக்கோட்டை சின்னராசா. பூநகரி லட்சுமணன், நாவற்குழி தவக்குமார். மற்றும் ரெத்தினம், சிவம் மயில்வாகனம் ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (149)

★ லிபியா லட்சக்கணக்கில்

# டுனீஷிய, எகிப்து வேலையாட்களை நாட்டிலிருந்து வெளியேற்றியது!

கெய்ரோ, ஆக-23

**லிபியா லட்சக்கணக்கில் எகிப்து, டுனீஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களைத் தன் நாட்டிலிருந்து வெளியேற்றியுள்ளது. இதனையடுத்து லிபியாவுடன் இவ்விரு நாடுகளினதும் உறவு சீர்குலையும் சூழ்நிலை தோன்றியுள்ளது டுனீஷியா, லிபிய எல்லைகளில் இரு நாடுகளினதும் துருப்புக்கள் குவிக்கப்பட்டுவருகின்றன**

டுனீஷியா, எகிப்து ஆகியவற்றின் தொழிலாளர்களுடன் மொராக்கோ, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் விரைவில் வெளியேற்றப்படலாம் என்று லிபியா அறிவித்துள்ளது

லிபியாவில் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிவித்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

லிபியாவின் இந்த நடவடிக்கையை டுனீஷிய அரசாங்கமும், எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபராக்கும் வெகுவாகக் கண்டித்துள்ளனர்

லிபியாவில் பணிபுரியும் இவ்விருநாட்டுத் தொழிலாளர்களையும் வெளியேற்றுவதன் மூலம், இந்நாடுகளில் பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்துவதே லிபியாவின் நோக்கம் என்று இந்நாடுகள் தெரிவித்தன

லிபியாவிலிருந்து டுனீஷியத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதையடுத்து. டுனீஷியா தன் நாட்டிலுள்ள லிபியத் தூதரகத்தை மூடியுள்ளது.

அத்துடன் அங்குள்ள 250 லிபியர்களையும் வெளியேற்றியுள்ளது. இவர்களில் 30 பேர் லிபிய ராஜதந்திரிகளாவர்.

டுனீஷியாவின் இந்த நடவடிக்கையை லிபியா கண்டித்துள்ளது. தன்மீது பழிவாங்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாமெனவும் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கையையடுத்து இவ்விரு நாடுகளினதும் எல்லைப் பகுதி பதட்டத்திற்குள்ளாகியுள்ளது. இரு நாடுகளும் தத்தமது துருப்புகளை இந்த எல்லைப்புறங்களில் குவித்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (கி)




## மரண தண்டனை!

தெஹ்ரான், ஆக-23

ஈரானில் விமானக் கடத்தற்காரர் ஒருவருக்கு நேற்று மரண தண்டனை வழங்கப்பட்டது.

இவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஈரானின் '727-போயிங்' விமானமொன்றைக் கடத்த முயன்றார் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (கி)

பஞ்சாப் தேர்தல்களில்

# 'அகாலிதள்' போட்டியிடாது? ராஜீவுக்கு புதிய தலையிடி!

புதுடில்லி, ஆகஸ்ட் 23

எதிர்வரும் பஞ்சாப் மாநில தேர்தல்களில் 'அகாலிதள்' கட்சி பங்குபற்றுமாவென்பது சந்தேகமாகவேயுள்ளது இக்கட்சியின் நிலை பிரதமர் ராஜீவுக்கு ஒரு புதிய தலையிடியைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'அகாலிதள்' தலைவர் சன் ஹர்ச்சன்சிங் லோங்கோவால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து இக்கட்சி தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதனால் பஞ்சாப் தேர்தல்களில் இது போட்டியிடுமாவென்பது சந்தேகமே.

இக்கட்சி தேர்தலில்போட்டியிடுவதிலிருந்து விலகுமானால் அண்மையில் செய்துகொள்ளப்பட்ட 'பஞ்சாப் தீர்வு' உடன்படிக்கை முறிவடைந்துவிட்டதாகவே கருதப்படும். ஆகையினாலேயே இவ்விடயம் பிரதமர் ராஜீவ்காந்திக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செப்டம்பர் மாதம் 25ம் திகதி பஞ்சாப் தேர்தல்கள் நடைபெறுமென இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. செப்டம்பர் 22ந் திகதி இத் தேர்தல் இடம்பெறுவதாக இருந்தது. ஆனால் 'லோங்கோவாலின்' மறைவு குறித்த சமயாசாரங்கள் காரணமாக மூன்று தினங்கள் இத் தேர்தல்கள் பின்போடப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்துக்கான 13 ஆசனங்களுக்கும், மாநில சட்டசபைக்கான 117 ஆசனங்களுக்கும் பஞ்சாப்பில் தேர்தல்கள் இடம்பெறும்.

இத்தேர்தல்களை ஒத்திவைக்கும்படி சுமார் எட்டு இந்திய எதிர்க்கட்சிகள் இந்தியப் பிரதமரிடம் கோரிக்கைவிடுத்துள்ளன. (கி)

## காலமானர்

(கொழும்பு)

அரசாங்க பொது சேவை தொழிலாளர் சங்கத் தலைவர் திரு தர்மசேன இருதய சிகிச்சைக்காக மாஸ்கோவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றபின்னர் திடீரென நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் காலமாகிவிட்டார். இவர் சம்மேளனத்தின் உபதலைவருமாவார். சகல தொழிற்சங்கங்களின் மரியாதையுடன் கனத்தை மயானத்தில் இன்று சனிக்கிழமை அடக்கம் செய்யப்படும். (க)

## மன்செஸ்ட்டர் விமான விபத்து தீப்பிடித்ததே காரணம்!

லண்டன், ஆக-23

நேற்று பிரிட்டனின் மன்செஸ்ரர் விமானநிலையத்தில் நிகழ்ந்த விமான விபத்தில் 54 பயணிகள் தீயில் சிக்குண்டு மாண்டனர். இவ்விபத்து இந்த ஆண்டில் இடம்பெற்ற 4-வது விமான விபத்தாகும்

மன்செஸ்ரர் விமானநிலையத்தின் ஓடுபாதையிலிருந்து மேலே கிளம்பியபோதே இவ்விமானம் விபத்திற்குள்ளாகியது

இவ்விமானத்திலிருந்து உயிர் தப்பிய பயணி ஒருவர் தெரிவிக்கையில், விமானம் கிளம்பியபோது வெடிச் சத்தமொன்று கேட்டதாகக் கூறினார்

தொடர்ந்து விமானத்தின் இடப்பக்கச் சிறகுப் பகுதி தீப்பிடித்துக்கொண்டதாகவும், இதனையடுத்து அப்பகுதியிலிருந்த இயந்திரத்திலும் தீ பரவியதாகக் கூறப்பட்டது.

இத்தீயையடுத்து விமானத்தின் முன் கதவு திறந்து கொண்டதாகவும், தொடர்ந்து பயணிகள் அமர்ந்திருந்த உட்புறத்திலும் தீ பரவியதாகவும் கூறப்பட்டது இவ்விபத்துக் குறித்த விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின. (கி)

வவனியா சம்பவங்கள்:

## சர்வதேசஜூரர்சபை விசாரணைவேண்டும்!

சென்னை, ஆகஸ்ட் 23

வவனியா சம்பவங்களுக்கு இராணுவ விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதென்ற ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனவின் அறிவிப்பை முன்னாள் யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரன், வன்மையாக கண்டித்துள்ளார்.

இவ் விசாரணை இராணுவ குற்றங்களுக்கு மன்னிப்பு அளிப்பதுபோலாகும் என்று குறிப்பிட்ட திரு யோகேஸ்வரன் இவ்விடயம் தொடர்பாக சர்வதேச ஜூரர் கமிஷன் விசாரணையை மேற்கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார். அத்துடன் இத்தகைய விசாரணை மூலமே திருப்தியான முடிவை எதிர் பார்க்கமுடியும்'' என்றார். (பி)

## திருமலையில் 5,000 தமிழ் குடும்பங்கள் அகதிகள்

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களால் தவரைகாடு, நிலாவெளிப்பகுதிகளில் 5000க்கு மேற்பட்ட தமிழ்க்குடும்பங்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னுபிரிக்காவில்

## கறுப்பின மாணவி மீது பொலிஸார் பலாத்காரம்!

டேர்பன், ஆகஸ்ட் 23

தென்னுபிரிக்காவில் கறுப்பினப் பொலிஸ்காரர்கள் சிலர் பள்ளி மாணவி ஒருவரை பலாத்காரமாகக் கற்பழித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாட்டோ என்ற தென்னுபிரிக்க நகரம் ஒன்றிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. டேர்பன் நகரில் நேற்று இடம்பெற்ற இனஒதுக்கலுக்கு எதிரான கூட்டமொன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

பாடசாலையிலிருந்து அக்கறுப்பின மாணவி வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது கறுப்பின பொலிஸ்காரர் ஒருவர் அவரை பொலிஸ்நிலையத்துக்கு பலாத்காரமாகக் கொண்டுவந்துள்ளார்

பின்னர் அப் பெண்ணை ஒரு நாள் இரவு முழுவதும் அங்குள்ள பொலிஸார் சிலர் கற்பழித்தபின்னர் மறுநாள் காலை வீடுசெல்ல அனுமதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது

வெள்ளையர் அரசாங்கத்திலுள்ள இப் பொலிஸாரின் இம் முறைகேடான நடத்தை பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து பிரிட்டோரியா பொலிஸ் தலைமைப் பீடம் அம் மாணவியை அவரது நகரப் பொலிஸ் கமாண்டரிடம் முறைப்பாடுசெய்யும்படி பணித்துள்ளது. (கி)

## இழப்புக்களை பதிவு செய்யுமாறு கோரிக்கை

(வவனியா)

கடந்தவாரம வவனியா நகரிலும் சுற்றுப்புறங்களிலும் நடைபெற்ற அசம்பாவித அட்டூழியசம்பவத்தில் உயிர் இழப்பு உடமைகள் பாதிப்புற்றவர்கள் தமது பாதிப்பு பற்றிய விபரத்தினை வவனியா பிரஜைகள் குழு தலைவரின் அலுவலகத்தில் பதிவு செய்யும்படி. மேற்படி பிரஜைகள் குழுவின் தலைவர் சட்டத்தரணி எக்ஸ்—சொர்ணபாலா கேட்டுள்ளார்.

பாதிப்படைந்தவர்களுடன் தமது பதிப்பு பற்றிய விபரத்தினை தெரியப்படுத்தும்படி அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## யாழ். ஆஸ்பத்திரியில் முதலுதவிப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசினர் வைத்தியசாலையில் முதலுதவிப்பயிற்சிக்கான புதிய பிரிவொன்று அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இவ் வைபவத்திற்கு வைத்திய அதிகாரி டாக்டர் நச்சினார்க்கினியர் தலைமை வகித்தார்.

அவர் தமது உரையில் சுகாதாரக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் ஒவ்வொருவரும் அதனை கற்றிருத்தல் வேண்டும் எனவும் வற்புறுத்தினார். சுகாதாரக்கல்வி அதிகாரி திரு வைத்தீஸ்வரன் சேவையில் கத்தியின் கூரை செம்மைப்படுத்துவதுபோன்று இப்பயிற்சி தொடர்ந்தும் அடிக்கடி நடைபெறவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராக சுகாதாரக்கல்வி அதிகாரி திரு வைத்தீஸ்வரன் திரு சீவரட்ணம்; தரு இம்மானுவல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய நிர்வாகசபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது. போஷகர் திரு நச்சினார்க்கினியார் (வைத்திய அதிகாரி) டாக்டர் எஸ். சிவகுமார், தலைவர் திரு அ. நமசிவாயம் செயலாளர் திரு என் விக்னேஸ்வரன் உப செயலாளர் செல்வி செ. ரஞ்சினி பொருளாளர் திரு. கே இராசகோபால் 5 பேர் கொண்ட செயற்குழு வொன்றுத் தெரிவு செய்யப்பட்டது.

இறுதியாக நடைபெற்றமுதலுதவிப் பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கான நற்சான்றிதழ்களை டாக்டர் எஸ் சிவகுமார் வழங்கினர், (ச)

**மணிவாக்கு**

சடினமான இதயத்தை உடையவன் கடவுளிட மிருந்து நீண்டதூரம் விலகியிருக்கிருன்:

— ஒரு மகான்:

# நமது நோக்கு

## உயிர்த் தியாகியை துப்பாக்கி என்செயும்?

படுகொலைக்குப் பேர் போன பஞ்சாப்பில், சீக்கிய அகாலிதள் கட்சித் தலைவர் சன் ஹர்ச்சன்சிங் லோங்கோவால் சுட்டுக்கொல்லப்பட்டது ஓரளவுக்கு அச்சத்துடன் எதிர்பார்க்கப்பட்ட சம்பவம்.

பஞ்சாப்பையும் அஸாமையும்—இருபெரும் சவால்களை மூக்குப்பொடிபோல் இந்தியப் பிரதமர் முடிவு கட்டிவிட்டாரென்ற செய்தியின் அபாயம் நிலவியதை நாம் தெளிவாகச் சுட்டிக் காட்டினேம்.

இந்திய உபகண்டம் ஒற்றுமைப்பட்டு உலகம் வியக்கும் வண்ணம் முன்னேறி வருவதை ஏகாதிபத்திய, முதலாளித்துவ 'சனி' நாயகங்கள் ஒருபோதும் விரும்புவதில்லை.

நன்மைக்குப் பாராட்டும் தீமைக்கு கவலையும் கண்டனமும் அந்நாடுகளின் அரசபீட அலுவலகத்தில் ஒற்றுமற்றிச் செய்திகளாக அனுப்பப்படுகின்றன.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமென்பதை வெள்ளை உள்ளம் படைத்த பாரதப் பிரதமரின் ஆளுமை அறிய அவாக் கொள்ளாது.

ராஜதந்திரம் இன்று துப்பாக்கியிலும் தலைகொய்வதிலும் தொழிற்படுவதை நாம் எங்கும் காண்கின்றேம்.

உலகில் மிகப்பெரிய தேசமாகிய இந்தியாவின் ஒரு மூலையில் இத்தகைய சதி ஒன்று உருவானுல், அது புதுடில்லியில் வெடித்தெழும்புவது இன்று பழக்கமாய்விட்டது.

இதனைப் புரிந்து மாற்று நடவடிக்கை எடுப்பது எங்ஙனம்?

இந்திராகாந்தி சுடப்பட்டு பாரதம் அனைத்தும் துயரில் தோய்ந்திருக்கும் போது, உலகத் தலைவர்கள்- சிலர் சந்தேகத்துக்குரியவர் பேரதிர்ச்சியில் பாரதம் வந்து தங்கள் அஞ்சலியை செலுத்திய அதேவேளையில், சீக்கியர் கூட்டம் ஒன்று பிரிட்டனிலும்அமெரிக்காவிலும்வெற்றிக்கொண்டாட்டம் 'சாம்பெயின் களியாட்டம்' நடத்தியதை உலகறியும்.

இதனை நாம் இழிவெனக் கண்டித்தால், பொதுஜன அபிப்பிராயமே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் நாம் எதிர்பார்க்கும் மன மாற்றம் கைகூடுகிறதா?

எங்கும் பயங்கரவாதம் என்றொரு தொகையிடாத (blank cheque) செக்கு என்ன வகையில் உதவுகிறது:

இயல்பாகவே சீக்கியர் போரிலும் கொலையிலும் திறமைசாலிகள். அதனைப் பயங்கரவாதம் என்று ஆழமற்ற முறையில் குறிசுட்டு, அவர்களைத் தனிக்கப்பிடிக்கும் தந்திரம் இதுவாறும் பலனளிக்கவில்லை.

"குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட" என்று சம்பந்த சுவாமிகள் தமது காலத்தில் சைவத்தையும் திருநீற்றையும் எதிர்த்த கூட்டத்தினரை, திருநீற்றுப் பதிகத்தில் பாடியிருக்கிறுர், அருளாளர்கள் அற்புதச் செயல்களில் ஈடுபட்டனர். அக்காலத்தில் சாக்கியர் கூட்டத்தை நால்வர் பெருமக்கள் முறியடித்து வெற்றி பெற்றனர்.

அவர்கள், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று மக்களுக்களித்த வாக்குறுதி இன்றைய உலகில் பிழை போனதன் காரணம் என்ன?

துவக்கும் துப்பாக்கியும் அழிவின் சின்னமாக இன்று இருப்பது போல், மனித வரலாற்றில் காலத்துக்குக் காலம் அவற்றின் வடிவம் மாறுபட்டு இருந்துவருகின்றது.

அன்று சைவத்தை விழுங்க முயன்ற சாக்கியர் கூட்டத்தைப் போல் இன்றைய மக்கள் ஆட்சியில் பாரதத்துக்கு சீக்கியர் கூட்டம் ஒன்று காலன்போல் தொடர்கிறது.

ராணுவ பாதுகாப்பு மட்டும் ஓரளவிற்கே உதவவல்லது.

சுதந்திரதினத்தன்று பாரதப் பிரதமருக்கு அளித்திருந்த பாதுகாப்பு நாட்டின் பலத்தைப் பிரதிபலித்தது; அதேசமயம் தீவிரவாதிகளுக்கு ஒரு சவாலாகஇருந்தது. இதற்குவிடைகாண என்றும் தயங்கார்.

ஐரிஷ் கெரில்லாக்கள் சொன்னது போல் "எங்களுக்கு அதிஷ்டதேவதை ஒருமுறை உதவினுற் போதும்" என்பதும், ஆட்சித்தலைவர்கள் என்றுமே பாதுகாப்புடன் நடமாடும் சிரமம் எந்நாளும் நாட்டை பதற்ற நிலையில் வைக்கிறது.

குறிப்பிட்ட இக்கொலையின் சோகம், தலைவர் லோங்கோவால், உடனடியாக பஞ்சாப் தேர்தலை நடத்துவதை விரும்பாததும், பாரதப் பிரதமரின் வேண்டுகோளைத் தட்டாது உடன்பட்டதிலும் காணப்படுகிறது.

வருகிற ஒக்டோபர் 5-ம் திகதியில் ஜனதிபதி ஆட்சி முடிவதையும், அதற்கு மேல் அது தொடர்வதானுல் அரசியல் திருத்தம் தேவைப்படுவதையும் ஆட்சியாளர் விரும்பாதது ஒரு பக்கம்; பஞ்சாப்பில் உடனடித் தேர்தல் அசம்பாவிதங்களுக்கு வழிதிறக்கும் என்பது மறுபக்கம்.

இந்தத் தர்மசங்கடம் உத்தமதுறவி தலைவர் லோங்கோவாலின் உயிருக்கு முடிவுகட்டியது. அவர் ஒரு புனித துறவியென்பதில் ஐயமில்லை.

இந்தப் படுகொலை தொடராது மக்கள் வெள்ளம், ஒரு பாதுகாப்புப் பட்டாளமாகத் திரளுமாயின் பாரதம் நிச்சயம் முன் வைத்த காலைப் பின் வைக்காது.

# ஜே. ஆர். அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுகிறது இந்தியா

## இந்து பத்திரிகை விமர்சனம்

'திம்பு' பேச்சுவார்த்தைகள் முற்றாக முறிந்து போகாமல் இருக்கும் வகையில் இந்திய அதிகாரிகள் எடுத்து வரும் முயற்சிகள், இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை வற்புறுத்தல் செய்து இலங்கை ராணுவத்தின் அட்டூழியங்களை நிறுத்தி அதிகார பகிர்ந்தளிப்புக்கான பிரதான அமைப்புக்களாக நேரடியாக தெரிவுசெய்யப்படும் பூரணமான மாகாண சபைகளை உருவாக்குவேன் என அவர் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றச் செய்யும் நோக்கம் கொண்டவையாகும்.

இதேசமயம் திம்பு பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளின் காரணமாக தமிழ் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்குமிடையில் விரிசல் பெரிதாகி விடாமல் தடுப்பதும் இந்தியாவின் நோக்கமாகும். ஏனெனில் த. வி. கூட்டணியினர் பேச்சுகள் அதன் தகுதிக்கேற்ப தொடர வேண்டும் எனக் கருதும் அதேசமயம் இலங்கை அரசபடைகள் தொடர்ந்து போர் நிறுத்த மீறல்களை செய்து வருவதால் ஆயுதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க ஈழம் தேசிய விடுதலை முன்னணியினர் உத்தேசித்துவருகின்றனர்.

இலங்கை அரசியலமைப்பின் 76வது ஷரத்தை மாற்றுவதின் மூலம் மாவட்ட அபிவிருத்திசபைக்கு முற்றிலும்புறம்பாக நேரடியாக தெரிவுசெய்யப்படும் மாகாணசபைகளை உருவாக்குவதென்ற திரு. ஜயவர்த்தனவின் வாக்குறுதியை நிறைவேற்றச்செய்வதே இந்திய அரசின் இப்போதைய வியூகமாகத் தெரிகின்றது. பொதுஜன வாக்கெடுப்பு ஒன்றைநடத்தாமலே பாராளுமன்றத்தில் இப்போதுள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு மேற்படி அரசியல் திட்ட மாற்றத்தைச் செய்ய முடியும் என்றும் கருதப்படுகின்றது. மாகாணசபைக்கான சட்டவாக்க அதிகாரங்களை சட்டத்தின் மூலம் வழங்கும் அதேசமயம் ஜனதிபதியிடமுள்ள நிர்வாக அதிகாரங்களை அரசியல் சட்டத்திற்கமைய அவர் கையளிக்கமுடியும்என்று கருதப்படுகின்றது.

இம்மாதிரியான ஒரு அடிப்படையில் புதிய யோசனைகளை இலங்கை அரசு முன்வைக்குமானுல் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்பும்படி வற்புறுத்தலாம் என இந்தியா கருதுகின்றது. ஆனுல் திரு. ஜெயவர்த்தன தொடர்ந்தும் மாவட்ட சபைகளையே பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாக வைத்துக்கொண்டிருப்பாரானுல் தமிழ்மக்களுக்கு ஓரளவு சுயாட்சியாகுதல் வழங்கி அமைதியைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் தோல்வியடையவே செய்யும்.

மாகாண சபைகளுக்கு நேரடித் தேர்தல்கள் நடைபெறும் விடயத்தில் திரு. ஜெயவர்த்தன தயக்கம் காட்டுவதற்குக் காரணம் கலப்பு மாவட்டங்களில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம்மூலம் ஏனைய சமூகங்களுக்கு அதிக சந்தர்ப்பத்தை வழங்கி வடக்குக் கிழக்கில் தமிழ்ப் பெரும்பான்மையைக் குறைப்பதே என்று தமிழ்த் தலைவர்கள் சந்தேகம்கொள்வதற்கு நியாயமிருக்கின்றது.

இதன் காரணமாகத்தான் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளை ஏற்

> சென்னை இந்துபத்திரிகையின் பிரபல அரசியல் விமர்சகர் திரு ஜி. கே. ரெட்டி கடந்த செவ்வாய்க்கிழமை தமது பத்திரிகையில் இலங்கைப் பிரச்னைபற்றி எழுதியசில கருத்துக்களை இங்கு தருகின்றேம்.

படுத்துவதாக அவர் முன்பு அளித்த வாக்குறுதியை மீறிவிட்டார் என்ற அவதூறுக்கு ஆளானபோதிலும் மாவட்ட சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தி அவை விரும்பினுல் மாகாண சபைகளாக இணைந்து கொள்ளலாம் என்ற தமது பழைய திட்டத்தையே மீண்டும் வலியுறுத்தி வருகின்றுர்.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நியாயமான ஒரு அடிப்படைத் திட்டம் உருவாகுமானுல் திம்புவைவிட்டு வெளியேறியுள்ள தமிழ்த்தீவிரவாதப் பிரதிநிதிகளை மீண்டும் மகாநாட்டுக்கு வரும்படி கோர இடமுண்டு. இப்பொழுது இராணுவத்தின் ஆத்திரமூட்டும் செயல்கள் இடம்பெற்றுவிட்டபோதிலும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து நிலைநாட்டப் படுவதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்வதுவே முக்கியமாகக் கருதப்படுகின்றது. மீண்டும் இரு தரப்பினருக்குமிடையில் போர் மூளுமானுல் இன்னெரு போர் நிறுத்தத்தை குறுகிய காலத்தில் கொண்டு வருவது கஷ்டமாயிருக்கும்.

இந்த அடிப்படையிலேயே திரு. பண்டாரி அண்மையில் இலங்கைக்குச் சென்றிருந்தார். ஒரு அமைதித் தீர்வைக் காணுவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இதுவாகவே இருக்கும் எனத் திரு. ஜெயவர்த்தனவையும் அவரது நண்பர்களையும் எச்சரிக்கைசெய்வதாக அவர் பயணம் இருந்தது. இரு தரப்பிலும் சலுகைகளைச் சமப்படுத்திக்கொள்வதன்மூலமே ஒருதீர்வினை ஏற்படுத்திக் கொள்ள முடியுமெனத் தமிழ்த் தலைவர்களுக்கும் பல்வேறு வழிகளில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

## "திம்பு பேச்சு முறிந்தது துரதிர்ஷ்டவசமானது"

### சூசைதாசன் கருத்து

(கொழும்பு)

'திம்பு பேச்சு வார்த்தையில் நல்லதொரு திருப்பம் ஏற்படும் என்று சகலரும் எதிர்பார்த்திருந்தார்கள் அது இப்போது காலவரையின்றி ஒத்திவைத்திருப்பது துரதிர்ஷ்வசமாகும் என்று மன்னார் முன்னுள் எம். பி. திரு. பி சூசைதாசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிக இக்கட்டான நிலையில் சாவா, வாழ்வா என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றுர்கள்.

திம்பு பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகி சகலரும் ஏற்கும் வகையில் தீர்வு ஏற்படவேண்டும் என்று நம்பிக்கையுடன் பிரார்த்திக்கிறேம்: தமிழ் மக்களின் எதிர்காலம் குறிப்பாக சிலமாதங்கள் இக்கல், துயரம், துன்பம், நிறைந்ததாகக் இருக்குமோ என அஞ்ச வேண்டியுள்ளது' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ. பி)

## இணைந்து செயல்பட முடிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோயில் வருடாந்த உற்சவகாலத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து செயற்பட சங்கரத்தை இந்து வாலிபர்சங்கம் முன்வந்துள்ளது. மேற்படி சங்க உறுப்பினர்களான திரு. க. குணசிசெல்வன். திரு கு. பாஸ்கரன், திரு. கு. தனஞ்செயன், திரு. கே. விவேகானந்தன், திரு கு. பிறைசூடி போன்றேர் தெரிவித்த கருத்துக்களைத் தொடர்ந்து இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச)

## கொழும்புக்கு மாற்றம்

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள துவரங்காட்டுப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் 8 தமிழர்கள் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 18ம் திகதி துவரங்காட்டுப்பகுதியில் 21 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதும் 14 பேர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

## கிளிநொச்சியில் அடகுவைத்தோர் போராட்டம்

[கிளிநொச்சி]

அடகுவைத்த நகைகளைத் திருப்பி ஒப்படைக்கக்கோரி கடந்த 7ம் திகதி முதல் கிளிநொச்சி மக்கள்வங்கி முன்பாக கிளிநொச்சி 'நகை அடகு வைத்தோர் பாதுகாப்புச் சங்கத்தினர் மறியல் போராட்டம் நடத்திவருகிறுர்கள்.

இப்போராட்டங்களில் பெருந்தொகையான பொது மக்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தை தொடர்ந்து வங்கி மூடப்பட்டுள்ளது.

## கார் எரிக்கப்பட்டது

(வவனியா)

வவனியா - மூன்று முறிப்பு என்ற இடத்தில் தனியாருக்கு சொந்தமான கார் ஒன்று இனந் தெரியாதவர்களினுல் மர்மமான முறையில் தீ மூட்டப்பட்டுள்ளது.

## நிறைவு காண்பாய்!

தொல்லையோ தொல்லை என்று
துவளும் என்நெஞ்சமே நீ
எல்லையோ ஏதும் இல்லா
அருட்கடல் அதனைக் காண
நல்லைமா நகரில் உள்ளான்
நலமெலாம் தரவே தோன்றும்
வள்ளலாம் முருகன் பாதம்
வணங்குவாய்! நிறைவு காண்பாய்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# தந்திக்கம்ப மரணம்: அடையாளம் காணப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி தந்திக்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த சடலம் கண்டியைச் சேர்ந்த இராமசாமி இராசு என்பவரின் சடலமென அவரது மனைவி மாரம்மாவினல் அடையாளம் காணப்பட்டது.

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

தந்திக் கம்பமொன்றில், சடலம் கட்டப்பட்டிருந்ததாகவும் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததாகவும். எம். கிருபாகரன் தெரிவித்தார்.

இறந்தவர் தன்னிடம் வேலை செய்து வந்ததாகவும். இம்மாதம் 10ம் தேதி காலை அவருக்குச் சம்பளம் கொடுத்ததாகவும், 11ம்தேதி அவர் வரவில்லை என்றும் 12ம் தேதி தந்திக்கம்பத்தில் அவரது சடலம் கட்டப்பட்டிருப்பதாக அறிந்து. கண்டியிலுள்ள அவர் மனைவிக்கு தந்தி அடித்ததாகவும் ஜி. மத்தியூஸ் தெரிவித்தார்.

இறந்தவர் கண்டியில் மரக்கறி வியாபாரம் செய்துவந்ததாகவும், பின் யாழ்ப்பாணம் வந்து கடற்றொழில் செய்ததாகவும், தங்களுக்கு 6 பெண் பிள்ளைகள் என்றும், இறந்தவர் மனைவி மாரம்மா தெரிவித்தார்

விசாரணை ஒத்திப்போடப்பட்டது. (க)

# இராஜசுந்தரத்தை விடுவிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் தலைவரும் பொதுச்சேவையில் முன்னின்று உழைத்து வந்தவருமான திரு. வை. இராஜசுந்தரம் இனம்தெரியாத நபர்களினல் கடத்தப்பட்டு இரு வாரங்கள் முடிவடைந்தபோதிலும் இதுவரை அவர் விடுவிக்கப்படவில்லை. அவர் ஏன்கடத்தப்பட்டார்? எதற்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்? என்ற விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே பொது நன்மை கருதியும் மக்கள் நலன் வேண்டியும் அவரை உடன் விடுதலை செய்யும்படி மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் சம்பந்தப்பட்டோரை வேண்டிக்கொள்கிறது.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் மத்திய செயற்குழு சார்பாக அதன் பொதுச்செயலாளர் திரு. சோ தேவராஜா விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

திரு. இராஜசுந்தரம் எமது இயக்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பும் பின்பும் தமிழ் மக்களுக்கு தன்னாலான சேவை புரிந்த ஒருவராவார். வட பகுதியில் மிகவும் நெருக்கடி மிக்க சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களுக்கு தன்னால்முடிந்த நிவாரணம் தேடிக்கொடுத்தவர். குறிப்பாக வல்வெட்டித்துறை, ஆவரங்கால் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அறுபத்தியொருமணிநேர ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்களுக்கும் திரு. இராஜசுந்தரம் தனது முழு சக்தியையும் பாவித்து சேவை புரிந்ததை இவ்வேளை மக்கள் ஞாபகப்படுத்துகிறுர்கள். இவ்வாறு மக்கள் தொண்டுசெய்து வந்த ஒருவரைக் கடத்தி மறைத்து வைத்திருப்பது நியாயமாகாது. அவரது சுகயொப்பத்துடன் அவரது மனைவிக்கு இரு கடிதங்கள் கிடைக்க ஏற்பாடு செய்த சம்பந்தப்பட்டவர்கள் எமது இந்த வேண்டுகோளை ஏற்று விடுதலை செய்வர் என எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாருடையது

அராலி வடக்கைச் சேர்ந்த திரு. வி. மனோகரதாசன் என்பவர் திரு. மொகமட்சம்சுதீன் மொகமட்யமால் டீன் என்பவரின் பி. ர. பரீட்சையில்கித்தியெய்திய சான்றிதழை ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராற்றில் விலக்குப் பிடிக்கச் சென்றவர் எரிகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பூநகரியைச் சேர்ந்த விவசாயியான க. வேலுப்பிள்ளை என்பவருக்கே இக்கதி ஏற்பட்டது. குடும்பத்தில் தனது பேரப்பிள்ளைகள் இருவருக்கிடையே ஏற்பட்ட தகராறென்றில் விலக்குப் பிடிக்கச் சென்ற போது அருகில் அடுப்பில் இருந்த சுடுநீர்ப்பானை கவிழ்ந்து அவர் மேல் ஊற்றப்பட்டதை தொடர்ந்து உடல் முழுவதும் எரிகாயங்களுடன் எழுந்து நடமாடமுடியாத நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளனார்,





## நல்லூரில் சகாய விற்பனை

நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர காட்சிச்சாலையில் ரூபா 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு அழகிய முருகன் ஸ்ரிக்கர், பொலிதீன் பை, அறிவு நூல், மற்றும் வீட்டுத் தோட்டத்திற்குரிய விதைகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.


'யாழ்தேவி'யில் நேற்று—

# பிரயாணிகள் நகை சூறையாடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

'யாழ்.தேவி' ரயிலில்இருந்த பிரயாணிகளின் நகை மற்றும் பொருள்கள் குண்டர்கள் கோஷ்டியினுல் சூறையாடப்பட்டுள்ளது.

நேற்றுப்பகல் குருநாகலை ரயில் நிலையத்தில் வைத்து இச்சூறையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிவந்த 'யாழ்தேவி' ரயிலின் முதல் இரு பெட்டிகளிலும் ஆயுதம் தாங்கிய சுமார் 25 பேர் கொண்ட கோஷ்டி 'திடுதிப்' என்று ஏறி அங்கிருந்த சகல பிரயாணிகளும் (ஆண்கள் - பெண்கள் உட்பட) அணிந்திருந்த நகைகளை வலோற்காரமாக அறுத்துக்கொண்டு இரு பெட்டிகளையும் விட்டு இறங்கித்தலைமறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் தாங்கிய குண்டர்கள் இரு பெட்டிகளுக்குள் ஏறியதும் அதற்குள் இருந்த பிரயாணிகள், தங்களுக்கு என்ன நடக்கப்போகின்றதோ எனப் பதற்றமடைந்து அல்லோலகல்லோலப்பட்டனர்.

இச்சம்பவத்தினல் 5-30 மணிக்கே யாழ்.தேவி' ரயில் நேற்று யாழ். புகையிரத நிலையம் வந்து சேர்ந்தது. (மா)

## யாழ். நீதிமன்றத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது

தடயப் பொருட்களான மோட்டர்கள், கைக்கடிகாரங்கள், பெற்றோமாக்ஸ், கத்தி, வாள், உட்படக் கந்தோரிலிருந்த சுவர்க்கடிகாரம், தொலைபேசி மற்றும் பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

காரியாலய இரு பெரிய யன்னல் கம்பிகளை வளைத்து அதன்மூலம் உள்ளே சென்றுள்ளார்கள் எனத்தெரியவந்துள்ளது. தடயப்பொருட்கள் வைக்கப்பட்டுள்ள அறைக்கதவும் உடைக்கப்பட்டுள்ளது.

இருதினங்களுக்கு முன்னரும் பட்டப்பகலில் நீதிமன்றத்தில் சைக்கிள்கள் கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

## தமிழ் ஈழம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை மழுங்கடிக்க புதிய யுக்தியொன்றைக் கையாள வேண்டிய கையாறு நிலையில் தவிர்க்கமுடியாதபடி முன் வைக்கப்பட்டலே அமெரிக்க ஆதரவுடனும், இந்திய அனுசரணையுடனும் நடைபெறும் திம்பு பேச்சுவார்த்தை ஆகும்.

"நாம், இதுவரை ஸ்ரீலங்கா இனவாத அரசாங்கத்துடன் தமிழ்ப் பிரதிநிதிகளால் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் கசப்பான அனுபவங்களை அறியாதவர்களோ, கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்களை மறந்தவர்களோ அல்லர். அல்லது இதுவரையான பேச்சுவார்த்தைத் தரத்தின், சிறிது மாற்றியமைக்கப்பட்ட பூசிமெழுகலே இது என்பதைத் தெரியாதவர்களுமல்லர்; இதனடிப்படையிலேயே ஆரம்பத்தில் பேச்சுவார்த்தையை நிராகரித்தோம்.

"இருந்தும் இந்திய அனுசரணையுடன் நடைபெறும்இத்தகைய பேச்சுவார்த்தையை நிராகரிக்கும் இவர்கள் உண்மையான சமாதானப் பிரியர்கள் அல்ல என எமது மக்களதும்; சர்வதேசத்தினதும் கண்ணேட்டம் ஒன்றிருந்தது. இத்தகு குற்றச்சாட்டைத் தவிர்ப்பதற்காகவும், நாம் அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்படுவதற்காகவும், சர்வதேச ரீதியான பிரச்சாரத்திற்காகவுமே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டோம்.

"பயன்படுத்த வேண்டிய நேரத்தில் பயன்படுத்தி, நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் நிராகரிக்காமல் மாற்றுவழியற்று நிற்கும் கூட்டணியின் கதி ஆயுதம்ஏந்திய இயக்கங்களுக்கு வேண்டாம். அந்நிய சக்திகளின் நிர்ப்பந்தத்திற்காகத் தமிழ் ஈழத்தையோ, கொண்ட கொள்கைகளையோ கைவிடும் இயக்கங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். இதுவரை பேச்சுவார்த்தையைக்கூட ஆயுதமாகவே பயன்படுத்தினேம். வலுவிழந்தகட்டத்தில் நாம் அதை நிராகரிக்கிறேம்.

"வரலாறு படைக்க மக்களின் பூரண சக்தியுடன் முற்படும் நாம் யாருக்காகவும், எப்போதும் இலட்சியத்திலிருந்து விலகமாட்டோம்." (க)

## இடைக்கால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது: இத்தலைவர்கள் இன்று அல்லது நாளை இந்தியப் பிரதமரை புதுடில்லியில் சந்தித்து தங்களது நிலைப்பாட்டைத் தெளிவாகக் கூறுவார்கள் என்று உத்தியோகபூர்வமாக நேற்றிரவு ஈழ தேசிய விடுதலை முன்னணி சென்னையில் அறிவித்தது.

இதற்கிடையே, இலங்கை இனப்பிரச்னை சுமுகமாக விரைவாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் புதுடில்லியில் இருக்கிறுர். இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஏற்கனவே திரு ராஜீவ் காந்தியுடன் ஆலோசனை நடத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, மீண்டும் 'பேச்சுவார்த்தை மேசை'க்கு இருதரப்பினரையும் கொண்டுவர பாரதப் பிரதமர் தீவிரமுயற்சி மேற்கொண்டுள்ளார்என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### ஈழ தேசிய விடுதலை முன்னணி

இதற்கிடையே ஈழதேசியவிடுதலை முன்னணியின் தலைவர்கள் இன்னும் இரண்டு தினங்களில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைப் புதுடில்லியில் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும், இப்பேச்சுவார்த்தையின்போது, திம்புவில் இலங்கை அரசு தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது சம்பந்தமாக விவாதிக்கப்படும் என்றும் முன்னணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் நேற்றுச் சென்னையில் அறிவித்தார்.

### ராஜீவ்-எம். ஜி, ஆர். சந்திப்பு

புதுடில்லியிலுள்ள தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன், திம்பு பேச்சுவார்த்தையின் முட்டுக்கட்டை நிலை குறித்து, இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

திரு- எம். ஜி.ராமச்சந்திரன் புதுடில்லியில் மூன்றுநாட்கள் தங்கியிருப்பாரெனஎதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மோசமடைந்து வரும் இராணுவத்தினரின் நெருக்கடியையும் அப்பாவித்தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருவதையும், அத்துமீறிச் செல்லும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் கவலை தெரிவித்த திரு; எம். ஜி. ராமச்சந்திரன் இவ்விடயம் தொடர்பாக தாம் பாரதப் பிரதமரிடம் எடுத்துக்கூற இருப்பதாக நிருபர்களிடம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

## பரந்தனில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"கிளிநொச்சி கூட்டுமுகாமில் இருந்துவாகனங்களில் பிரயாணிகள் சகிதம் சென்ற ஆயுதப்படையினர் பரந்தன் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து இளைஞர்களைக் கைது செய்து ஆனையிறவுத் தடைமுகாமிற்குக் கொண்டுசென்றபோது இடையில் ஒருவர் இறந்ததாகவும் இறந்தவரின் சடலத்தையும் கைதுசெய்யப்பட்டவர்களையும் ஆனையிறவுத் தடைமுகாம் முன்பாக வைத்து 'யாழ்தேவி' ரயிலில் ஏற்றியவர்கள் கிளிநொச்சி கொண்டு வந்தார்கள்

இதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதற்றநிலையால் கிளிநொச்சிப் பஸ்நிலையம் சந்தைப் பகுதி வெறிச்சோடியதுடன் கிளிநொச்சி புகையிரத நிலயத்திற்கு வந்த பிரயாணிகளும் பயணத்தை மேற்கொள்ள அஞ்சிநின்றனர்.

இச்சம்பவத்தையடுத்துச் சுமார் அரைமணி நேரம் தாமதித்தே ரயில் கிளிநொச்சியை வந்தடைந்தது. (மா)

## கடைசி நேர


## விளம்பரம்

### தேவை

டிக்கட் டவலஸ் ஏஜென்டிற்கு பெண் இலிகிதர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்உரிமை அளிக்கப்படும். உடன் தொடர்புகொள்ளவும். திரு றேட் சென்டர், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 221

அச்சகத்திற்கு பிளேட்டின் மெசின் வேலை நன்கு தெரிந்த அனுபவமுள்ள வேலையாள் தேவை நற்சான்றுப் பத்திரத்துடன் வரவும். கு. வி அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 220


## பணிவான வேண்டுகோள்

மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழுவின் கௌரவ செயலாளர் திரு. க. கைலயங்கிரிச்செல்வம் அவர்கள் 21-8 85 அன்று காலை யாழ்ப்பாணம் சென்றவர் இன்று வரை வீடு திரும்பவில்லை. அன்னார் பற்றிய தகவல்கள் யாராவது அறிந்தால் தயவுசெய்து எமக்கு அறியத்தருமாறு மிகவும் பணிவாக வேண்டுகிறோம்.

பிரஜைகள் குழு, மயிலிட்டி வடக்கு

223

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 8 (1985-8-24)
கிழமை: சனி
திதி: நவமி மு இ. வரை
நக்ஷத்திரம்: அனுஷம்
காலை 6-36ன் மேல் கேட்டை

மேடம்: சிறிய விடயம் கூட சிரமமாகத் தோன்றும். இன்று திருப்தியற்ற நிலை தென்படும். வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப்பாதிக்கும்.

இடபம்: இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும். மதிப்பும் உண்டு.

மிதுனம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயம் அனைத்தும் இன்று ஊமையாகிவிடும் உடல் நலம் சிறிது பாதிக்கப்படும்.

கடகம்: இதயப்படுதாளில் இன்பத்தின் மின்னல். பிதா வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் செய்தொழிலாலும் இன்று சிறப்புண்டாம்.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழிற்துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வெளியிடத்து தொடர்பும் உண்டு

கன்னி: இலட்சியபாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவும் கிடைக்கலாம். சுப தினம்.

துலாம்: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும் புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும். உம்மிடம் உதவி பெற்றவர்களே கையை விரிப்பர்.

விருச்சிகம்: அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் நிகழலாம். அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும்.

தனுசு: தெளிந்த மனம் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்தவாழ்வும் உண்டு.

மகரம்: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களால் சிறப்புக்கள் பரவும். முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

கும்பம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம். வியாபாரிகள் விழிப்புடன் செயலாற்றவும். குடும்பத்திலும் அமைதி நிலவும்.

மீனம்: புத்திர வழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. எண்ணிய விடயமாக எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

## ரூபவாஹினி

மாலை

2-30 கொத்மலைத்திட்டம் நேரடி ஒளிபரப்பு
5-00 செய்திகள்
5-05 'கார்ட்டூன்' நிகழ்ச்சி
5-30 'ரோட் டு வெம்பிளி' விளையாட்டு நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
7-00 விஞ்ஞான நிகழ்ச்சி
8-00 செய்திகள் [சிங்களம்]
8-25 நாடக நிகழ்ச்சி [சிங்களம்]
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-25 சிங்கள நிகழ்ச்சி
9-50 ஸ்டாஸ்கி அன்ட் ஹச் [ஆங்கில நிகழ்ச்சி].
10-40 ஒளிபரப்பு முடிவு.

## புதுவித 'மரண தண்டனை'

(கல்வியங்காடு)

பாண், வாழைப்பழம் என்பவற்றைத் திருடியதற்காக 'மின்கம்ப மரண தண்டனை' வழங்கப்பட்டது!

"குழந்தைப் பிள்ளைகளிடமிருந்து பாண், வாழைப்பழம் போன்றவற்றைத் தொடர்ச்சியாகத் திருடிய குற்றத்துக்காக இவருக்கு நாம்மரண தண்டனை வழங்கி இருக்கிறோம்" என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டியும் அருகில் காணப்பட்டது.

'மரணதண்டனை' விதிக்கப்பட்டவர், கழுத்தில் கயிறு போடப்பட்ட நிலையில், மின்கம்பத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தார்.

அரியாலையில், காகம் ஒன்றே இம்மரண தண்டனையைப்பெற்றதாகும்!

## திருமலையில் 20,000 அகதிகள்

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள 40 அகதிகள் முகாம்களில் சுமார் 20,000 அகதிகள் தஞ்சமடைந்துள்ளார்கள் இவர்கள் பங்கீட்டு உணவு பொருட்களை பெறுவதற்காக பதிவு செய்துள்ளனர். (க)

திருமலை
= வே. ரவீந்திரன் –

## மூதாட்டி மின்சாரத்திற்கு பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மூதாட்டி ஒருவர் மின்சாரத்திற்குப் பலியானார்.

யாழ். சந்திரத்து சந்திக்கருகில் உள்ள சுப்பையா செல்லம்மா (60 வயது) என்பவரே பலியானவராவார். (க)

## மர்ம ஹெலிகொப்டர்

(இரத்தினபுரி)

இரத்தினபுரியிலுள்ளதோட்டம் ஒன்றில்கடந்தசெவ்வாய்க்கிழமை தரை இறங்கிய மர்ம 'ஹெலிகொப்டர்' குறித்துத் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

'மர்ம ஹெலிகொப்டர்' பற்றிய விபரம் எதுவும் நேற்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## அருள்பாலிக்கும் வேலணை முத்துமாரி அம்மன்

வேலணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம வேலணை கிழக்கின் பெருங்குளம் தென்கரையில் அமைந்துள்ளது. மாரி காலத்தில் இக்குளம்நிரம்பி கோவிலைச்சுற்றிவெள்ளம்நிறைந்திருக்கும் காட்சி அம்பாளை தரிசிப்பவர்களுக்கு அதிகதெய்வபத்தியை அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது, ஆலயத்தின் தென்பக்கத்தில் மகாவித்தியாலயமும் கிழக்குபக்கமாக மடஆலயமும் தீர்த்தக் கேணியும் வடபக்கம் அன்னதான மடமும் அமைந்துள்ளது ஆலயத்துக்கு சிறப்பைக் கொடுக்கின்றது.

ஈழவள நாட்டிலே தமிழர்கள் வழிபட்டு வரும் கோவில்களிலே புராதனவற்றில் இக்கோவிலும் ஒன்று என ஒல்லாந்தர் காலத்து பதிவேடுகளில் இருந்து ஆங்கிலேயர்களால் சேகரித்துவைத்துள்ள கச்சேரி பதிவேடுகளில் இக்கோவிலைப்பற்றிய குறிப்பு உள்ளது இதில்இருந்து இக்கோவில் 1875ம் ஆண்டு அமைக்கப்பட்டது அக்காலத்து நமது முன்னோர்களில் தீவுப்பகுதி மக்கள் அம்மன் வழிபாட்டையே பின்பற்றினர்கள் என்பதற்கு நயினாதீவு நாகபூசனி அம்மன் வேலணை அம்மன் கோவில்கள் சான்றாக அமைந்துள்ளன.

மதுரை அம்மனை பின்பற்றி இக் கோவில்கள் தமிழ் ஈழத்தில் அமைக்கப்பட்டது.

இலங்கை சரித்திரத்திலே போர்த்துக்கேயர் படையெடுப்பின் பின் இக்கோவில்கள் அழிக்கப்பட்டன. இக் கோவில்களின் வழிபாட்டு விக்கிரகங்கள் அங்குள்ள காடுகளில் போர்த்துக்கேயரால் மறைக்கப்பட்டன இவ் விக்கிரகங்கள் மதுரையில் இருந்து தமிழ் அரசர்கள் காலத்தில் இங்கே கொண்டு வரப்பட்டன. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட அம்மன் விக்கிரகத்தை மரங்களும் பற்றைகளும் சூழ்ந்த புதருக்குள் கிடந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் கட்டமதனால் கண்டு எடுக்கப்பட்டு அவ்வூர்மக்களால் இப்பொழுது கோவில் இருக்கும் இடத்தில் சிறிய கோவில் அமைத்து வழிபட்டு வந்தார்கள்.

ஒவ்வொரு வெள்ளி தோறும் ஒவ்வொருபௌர்ணமிக்கும் திருவிழா நடைபெறுகின்றது மேலும் சூரன்போர், ஆடிப்பெருவிழா, நவராத்திரி பூசைகள் யாவும் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன இவ்விழாக்களினல் அம்பாளின் அருளை எக்காலத்திலும் பெறக்கூடியதாக உள்ளது

— வ சண்முகராசா

## முற்போக்குக் குழு

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீமகாவிஷ்னு சனசமூகநிலைய அனுசரணையுடன் அவ்வூர் மக்களால் 10 பேர் கொண்ட கிராம முற்போக்குகுழு என்னும் சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது

இச் சபையின் பிரதான நோக்கம் இக் கிராமமக்களின் பிணக்குகளைத் தீர்த்தல் ஒழுக்கக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலுமாகும்.


ரெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED
★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்
Rs. 6/75-க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

V'DEO VISION
(வீடியோ விசன்)
யாழ்ப்பணத்தில் திருமணம் மற்றும் சகல மங்களகரமான வைபவங்களுக்கும்,
நவீன கருவிகளைக்கொண்டு "வீடியோ" படம் எடுத்து நிகழ்ந்தவற்றை நினைவூட்டும் வகையில் கண்டு களிப்புற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
நிபுணர்களின் சிறந்த சேவையும் குறைந்த செலவும்
வீடியோ விசன்,
213, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (196)

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது
ரூபா 2,000/- க்கும் மேல்
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.
MASTERS ABC 6/85 181

## நியூ சினிமாலயா

[R. G பில்டிங் மேல்மாடி]

10-30, 12-30, 2-30, 4-30, 6-30

INTRUSION CAMBODIA

பல ஆயிரக்கணக்கான இளைஞரின் வேண்டுகோளுக்கிணங்க புத்தம் புதியபிரதியாக வெளியிடப் பட்டுள்ளது.

## நியூ சாந்தி மினி

10-30, 2-30, 4-30, 6-30

Pending Grievences

(JUNGLE WOMEN)

—இன்று மட்டும்—

## ஸ்ரான்லி மினி

5'X5" திரைவானில்

10-30, 12-30, 2-30 4-30, 6-30

LAST ORGY

ஹிற்லர் ஆட்சியில் தீவிரவாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.

Adults only

## மே(f)ஜெயர் மினி சினிமா

(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)

10-30, 4-45, 7-00

"Basket Case"

தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

## S.T.L. மினி சினிமா

திருநெல்வேலி

10-30, 2-15, 5-15

சிவாஜி, பானுமதி நடித்த

கள்வனின் காதலி

22, 23 திகதிகளில் கமல், அம்பிகா நடித்த

உயர்ந்த உள்ளம்

## சரவணபவன் மினி சினிமா

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

4 x 4 திரையில்

10-30, 2-15, 4-30, 7-00

UNCOMMON VALOUR

கேணல் ஜேசன் ரொட்ஸ் என்பவர் வியட்னாமில் காணாமல்போன தன் மகனைத் தேடி கெரில்லா பயிற்சி பெற்ற வீரர்களுடன் செல்கின்றார். அங்கு நிகழும் மோதல்கள் எழுத்தில் வடிக்கமுடியாதவை. Hell Cats, Code Name Wild Geeseக்குப் பின் மீண்டும் ஒருவிருந்து Action-Packed-Adventure

## உஷா மினி

10-30, 2-30, 4-45, 6-45

CODE NAME WILD GEESE

இப்படத்தை பார்த்துக் கொண்டிருக்கும்போது நிச்சயமாக நீங்கள் உங்களையே மறந்து விடுவீர்கள். தொடங்கி முடியும் வரை விறுவிறுப்பான தாக்குதல்கள், சுழன்று விளையாடும் நவீன இயந்திரத்துப்பாக்கிகள், கனல் கக்கும் எரிவாயு துப்பாக்கி (Gas Gun) உங்களை உணர்ச்சிவசப்படுத்தும்.

இன்னும் 3 தினங்கள் மட்டுமே.


## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினர் இரத்ததானம் செய்ய முன்வந்துள்ளனர். மேற்படி சங்கத்தினரை யாழ். அரசினர் வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவு வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இத் தீர்மானத்தை எடுத்ததாக சங்கத் தலைவர் திரு ஜி சிதம்பரநாதன் தெரிவித்தார். (ச)


## "லதா" மினி

(கோண்டாவில்)

10-30, 3-30, 6-45

சிரஞ்சீவி—ராதிகா

டக்கர் ராஜா

சண்டைப்படம்

## ராஜா தியேட்டர்

யாழ்ப்பாணம்

தினசரி 10-30, 2-30, 6-00

முத்துராமன் - ஜெயலலிதா தங்கவேலு

கணவன் மனைவி

## பாலகன் V.V.

(சாந்தி முன்பாக)

Daily 5 Shows

LONGEST BRIDGE

1937-ல் ஜப்பான் முப்படைகளாலும் சீனாவை தாக்கியபொழுது யார் வெற்றிபெற்றார்கள்? படம் துவங்கி முடியும் வரை ஒரே வேட்டு சத்தங்கள் ஏன்?

## லிபேர்ட்டி மினி

வெலிங்டன் சந்தி அருகாமை

10-30, 12-30, 2-30, 4-45

Intrusion Cambodia

படத்தை ஒருமுறை பாருங்கள் மறுமுறையும் பார்ப்பீர்கள். பார்த்தவர்களின் தீர்ப்பு. லிபேர்ட்டியில் பார்க்கவேண்டும். நகரத்தில் தரமான நல்ல படங்களை திரையிடும் ஸ்தாபனம். பார்த்தாலும் பார்த்தோம் நல்ல படம் பார்த்தோம் என்ற சந்தோஷம் உங்களுக்கு இப்படம் தருகிறது. இன்றைய இளைஞர்கள் விரும்பும் ஒரே படம். நாளைய சிறுவர்கள் பார்ப்பதும் இதுவே. தவறவிடாதீர்கள்.

## வெலிங்டன்

10-30, 2-15, 4-15, 6-30 p.m.

புறூசிலி நடித்த

THE DRAGON DIES HARD

கராட்டி Film

தவிர்க்க முடியாத காரணத்தால் காண்பிக்க முடியாத படம். இன்று முதல் காண்பிக்கப் படும் பயங்கரக் கராட்டிச் சண்டைகள் நிறைந்தது.

முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப் படுகிறது.

## ரீகோ சினிமா

10-30, 2-30, 6-30

2-வது மாதமாக ஓடுகிறது!

தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், இலக்கியா, ஜெய்சங்கர் நடித்த

சாரு மகேந்திரரவின்

நீங்கள் கேட்டவை

சுப்பர்ஹிட் கலர்


## நினைவுதினம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரியைச் சேர்ந்த நுணாவில் குளம் கண்ணகை அம்பாள் ஆலய பரிபாலகர் பிரமஸ்ரீ பொ. குருசுவாமி தீட்சிதரின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் இம்மாதம் 25ம் திகதி ஞாயிறன்று காலை விஷேட பூசை, அபிஷேக ஆராதனைகள், நினைவு தினச் சொற்பொழிவு மாகேசுரபூசை ஆகிய நிகழ்ச்சிகளுடன் நடைபெற இருக்கிறது.

## பாவனையாளர் சங்கம்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழைகிழக்கில் பாவனையாளர் சங்கம் அமைக்கப் பட்டுள்ளது.

மேற்படி சங்க தலைவராக திரு. தி. செல்லத்துரையும் உபதலைவராக பொ. பூபாலசிங்கமும் செயலாளராக பொ. கந்தையாவும், உபசெயலாளராக செ. முருகையாவும், பொருளாளராக செ. சிவசிதம்பரமும் 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## விபத்து

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள் - மினிபஸ் விபத்தில் காயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து பற்றி தெரிய வருவதாவது: நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த எம். நடராசா (18 வயது), எஸ். சந்திரசேகர் (17 வயது) இருவரும் நகைத்தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்துவிட்டு மதிய போசனத்துக்காக தமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றதாகவும், மனோகரா தியேட்டர் சந்தியில் இவர்கள் மினிபஸ் ஒன்றுடன் மோதியதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த இவ்விருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டுள்ளனர். (ச)

## இளைஞர் குழுவுக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வலி- தென்மேற்கு தெல்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்க மாதகல் கிளை உடைக்கப்பட்டு களவாடப் பட்டதைத் தொடர்ந்து மேற்படி சங்கம் பலகஷ்டங்களுக்குள்ளாகியிருந்தது. இதனால் சங்க ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்

இது தொடர்பாக தீவிரவாத இளைஞர் குழுவொன்று (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்) எடுத்த முயற்சியின் பிரகாரம் களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து சங்கம் இயங்க உதவிய இந்த இளைஞர் குழுவுக்கு சங்க அங்கத்தவர்கள் நன்றி தெரிவித்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## மருதடி விநாயகர் இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அருள் மிகு மருதடி விநாயகர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை இன்று 24 ம் திகதி முதல் அடுத்த மாதம் 3 ம் திகதி வரை காலை 7-30 மணி முதல் மாலை 4-30 மணிவரை இவ்வர்ச்சனை நடைபெறும். (ச)

## வட்டாரக்கல்வி அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கல்வித் திணைக்கள வட்டாரக்கல்வி அதிகாரியாக உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் இ. சிவானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஈ)


## ஏஜென்சிகள் தேவை

தமிழ்மக்களின் அபிமான தினசரியான "ஈழநாடு"வுக்கு பின்வரும் இடங்களில் ஏஜென்சிகள் தேவை

★ அனலைதீவு ★ புன்னாலைக்கட்டுவன்
★ விசுவமடு ★ நயினாதீவு ★ மிருசுவில்
★ அக்கராயன் ★ பரந்தன் ★ மயிலிட்டி
★ ஒட்டுசுட்டான் ★ கொக்குவில்

பொதுமுகாமையாளர்,

"ஈழநாடு", யாழ்ப்பாணம்.

[215]

## பெண்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு

(QATAR) கட்டார் அரசாங்க மகளிர் பல்கலைக்கழகத்தில் பராமரிப்பு வேலை

★ பல்கலைக்கழக மகளிர் விடுதியிலேயே இலவச தங்குமிடவசதியும், இலவச உணவும், இலவச மருத்துவ வசதிகளும்,

★ 10 நாட்களுக்குள் பிரயாணம் செய்யவேண்டும்.

★ மாதச் சம்பளம் ரூபா 5000/-க்கு மேல்.

★ வயது: 30—40 வரை.

★ CLOSING DATE: 26-08-85.

முக்கிய குறிப்பு: எமது ஸ்தாபன பிரதிநிதி உங்களை DOHA (QATAR) நேரடியாக அழைத்துச்செல்வார்.

★ பாஸ்போட், இரண்டு பாஸ்போட் பிரதிகளும், 6 படங்களுடன் நேரில் உடன் வரவும்.

விலாசம்:- "திருத்தணிகை" நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

நேரம்:- காலை 9-00 முதல் மாலை 3-00 வரை.

Labour Licence No. 0015.

Approval No: FE/6/FEA/184/ 4098 193


## ஓராண்டு நினைவஞ்சலி

### இ. அந்தோனிமுத்து

[இளைப்பாறிய தந்தி, தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்]



மலர்வு: 6-12-1899

உதிர்வு: 24-8-1984

நித்திய பிதாவே யேசுவின் திருப்பாடுகளின் பெறுபேறுகளைப் பார்த்து உமது தாசனுடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

யாழ். வீதி, வல்வெட்டித்துறை,

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

218

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# வவனியா தமிழ் அகதிகள் மண்டபம் வந்தனர்

## 300 பேரில் ஐவர் குழந்தைகள்

(சென்னை)

வவனியா மாவட்டத்திலிருந்து 300 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் மண்டபம் முகாமிற்கு வந்துள்ளனர்.

இவர்களில் 5 குழந்தைகளும் காணப்பட்டன.

தமது பெற்றோர்களில்லாமல் தனியாக இக்குழந்தைகள் இங்கு வந்துள்ளனர்.

பெற்றோரிடம் போதுமான பணமில்லாததால் தம்களுடன் அவர்கள் வரவில்லை என்று 5 குழந்தைகள் தெரிவித்தன.

தந்தை மீன்பிடிக்கச் சென்றிருந்ததாகவும் ஆதலினால் தாயார் வருவதற்கு மறுத்துவிட்டதாகவும் மற்ற இரு குழந்தைகளும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## "ஏற்கனவே நாம் சந்தித்த பேச்சுவார்த்தைகள் போல் இதுவும் ஒரு கேலிக்கூத்து"

[யாழ்ப்பாணம்]

"பூட்டான் மாநாட்டில் பேரினவாதிகளின் அரசு ஈழ மக்களின் குறைந்த கோரிக்கையான நான்கு அம்சத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், ஏற்கனவே நாம் சந்தித்த பேச்சுவார்த்தைகளைப்போலவே இதுவும் ஒரு கேலிக்கூத்தாகும்.

தமிழ் ஈழ 'கொமாண்டோ யூனிட்' நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தங்காலைச் சிறைச்சாலைப் படுகொலையும், தீப்பற்றி எரிகின்ற வவனியாவும், இரத்த வெள்ளத்தில் மிதக்கின்ற திருமலையும், இருண்டுபோன மட்டுநகரும், திசைதெரியாது தடுமாறும் மலையகமக்களும், அட்டூழியங்களுக்கு வரலாறு படைக்கின்ற யாழ். நகரும் உங்கள் நினைவைவிட்டு மறந்து போயிற்று? இத்தகைய அமுக்கமுடியாத வரலாற்றினைப் படைத்துவிட்ட எமது ஈழப்போராட்டத்தை ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தை நடாத்தவேண்டிய தன் அவசியம் தான் என்ன?

இதுவரை எம்மை வழிநடாத்திய தலைமைகளை நம்பி ஏமாற்றமடைந்த மக்களுக்கு இன்று எங்கள் நடவடிக்கைகளும் அத்தகைய தேர்தல் தொகுதிகளை ஒன்றுபடுத்த வேண்டுமா? எங்கள் கரங்களில் சமாதானக் கொடி தேவைதானு? (மா)

## பெருமாள்கோயில் சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில் 45-ம் நாள் மண்டலாபிஷேகமும், மகா சங்காபிஷேகமும் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கிறது. (க)

## குரும்பசிட்டியில் ரூ. 3 லட்சம் கொள்ளை

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டியில் திருமதி வன்னியசிங்கம் என்பவரது வீட்டில் நேற்று முன் தினம் இரவு சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது,

ஆயுதங்கள் சகிதம் வீட்டினுள் புகுந்த ஒரு கோஷ்டி இத்தக் கொள்ளையை நடத்திச் சென்றுள்ளது.

இந்த வீட்டினுள் உரிமையாளர் முன்னர் அடைவுகடை வைத்திருந்தனர். 1981ம் ஆண்டு இவர்களது அடைவு கடையில் 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதும், அதில் 3 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திரும்பவும் இவர்களுக்கு கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்த நகைகளும் தற்பொழுது கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## கந்தர்மடத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடத்திலுள்ள ஒருவரின் வீட்டில் ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்கள் வீட்டாரை அறையில் பூட்டி வைத்துவிட்டு, தங்க நகைகள் உட்பட பெறுமதிமிக்கபொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்! இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது.

அன்றைய தினம் இரவு மேற்படி வீட்டுக்கு வந்த நபர்கள் வெளியே நின்று கொண்டு வீட்டு உரிமையாளரைக் கூப்பிட்டு தமது வானுக்குப்பெற்ரோல் முடிந்துவிட்டதால் அவரது மகனின் காரைத்தருமாறு கேட்டனராம். கார் ஓடும் நிலையில் இல்லை என்றும் காருக்குள் இருக்கும் பெற்றோலை எடுக்குமாறும் கூறிய வீட்டுக்காரர் வெளிக்கதவைத் திறந்து கொண்டு வந்தபோது, திடீரென உள்ளே நுழைந்த நபர்கள் வீட்டினுள்ளவர்களை அறையில் பூட்டிவைத்துவிட்டு மேற்படி பொருட்களை அபகரித்துச் சென்றனராம்.

வீட்டு உரிமையாளரையும் அறையில் பூட்டிவைத்ததோடு அலுமாரியைத் திறக்குமாறு கூறி அவரையும் தாக்கினார்களாம்,

## ஜெயதிலகராஜா எனது உயிரை காப்பாற்றினுர்- வண. சிங்கராயர்

(கொழும்பு)

"மட்டக்களப்பு சிறை உடைக்கப்பட்டாலும் வெளியே போவதில்லை என்று நான் முடிவு செய்திருந்தேன். 1983 ஜூலை மாதம் வெலிக்கடைச்சிறையில் 53 தமிழ்க் கைதிகள்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து எங்களுக்கும் என்ன நடக்குமோ என்று நாம் பயந்து கொண்டிருந்தோம்" என்று வணபிதா ஆபரணம் சிங்கராயர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அவர் மீதானவழக்கு நேற்று நீதிபதி எச் டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச தரப்புச் சட்டத்தரணி சி. ஆர். டி. சில்வா அவரை குறுக்கு விசாரணை செய்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வணபிதா சிங்கராயர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

"வெலிக்கடைச் சம்பவத்தினுல்பயந்த நாங்கள் ஜனதிபதி மனித உரிமைகள் குழு, இந்திய தூதரகம்உட்பட பலருக்கு கடிதம் எழுதினேம். என்னுடன் சிறையிலிருந்த டேவிட், வண. ஜெயதிலகராஜா, திரு. ஜெயகுலராஜா ஆகியோர் உட்பட பலரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தக்கடிதங்களை எழுதினேன் ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கு நான் எழுதிய கடிதம் சென்றதோ தெரியவில்லை. அவர்கள் குறிப்பிட்ட சிலருக்கு கடிதம் எழுதச் சொன்னார்கள். அதன்படி எழுதினேன் ஆனுல் போராளிகளோ அல்லதவேறு யாரோ என்பது எனக்குத் தெரியாது அவர்களின் வற்புறுத்தலின் பேரில் இந்தக்கடிதங்களை எழுதியதினுல் அது அவர்களுக்கும் சென்றிருக்கலாம் ஜெயதிலகராஜா சொல்ல நான் எழுதிய கடிதம் மட்டக்களப்பு சிறை மீட்பு பற்றியதாக இருந்தாலும்கூட சிறை மீட்பு சட்டரீதியானது அல்லது சிறைஉடைப்புரீதியில் நான் சிறை மீட்கப்படலாம் என எண்ணினேன்".

அச்சமயம் குறுக்கிட்ட அரச தரப்பு சட்டத்தரணி "உமா மகேஸ்வரன் குழுவினரால் சட்டரீதியாக நீர் சிறைமீட்கப்படலாம் என எண்ணினீரா?"

பிதா சிங்கராயர்; "இல்லை. பொதுவாகக் கூறினேன். சிறி என்பவர் போராளி என்பது எனக்கு தெரியாது. அலன் தம்பதிகள் கடத்தப்பட்டது தொடர்பாக அரச வானெலியில் நான் போராளிகளுக்கு வேண்டுகோள் விடுத்தேன். 1983 ஜூலையில் ஜெயதிலகராஜா எனது உயிரைக்காப்பாற்றினுர் என்ருர்.

## சம்பள காசோலை களவு

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரியில் புதுவிதமான திருட்டொன்று நடைபெற்றுள்ளது.

கச்சேரியில் கடமையாற்றும் அதிகாரியொருவரின் சம்பள காசோலை பணமாக மாற்றப்படுமுன்னரே களவாடப்பட்டுள்ளது.

இம்மாதம் 15-ம் திகதி நடைபெற்றுள்ள இத்திருட்டில் 2046 ரூபா 50 சதம் பெறுமதியான செக்கைக் களவு கொடுத்தவர் வி. எஸ் சுவாமிநாதன் என்பவராவார். (ச)

## துண்டுவிழும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1986-ம் ஆண்டு பட்ஜட்டில் மொத்தச் செலவினம் 6 900 கோடி ரூபா என்றும் வருமானம் 3 700 கோடி ரூபா என்றும் துண்டு விழும் தொகை ,200 கோடி ரூபா என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

## ஆய்வரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் சேதி - ஆய்வு மன்றத்தின் மாதாந்த ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு நா சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெறும் இவ்வாய்வரங்கில் திரு வே சின்னத்துரை "கர்ம மறைவு" பற்றி ஆய்வுரை நடத்துவார். (செ)

## விமர்சனம்

(யாழ்ப்பாணம்)

மண்சுமந்த மேனியர் (நாடகம்) (தெருக்கூத்து) ஆகியவற்றின் விமர்சனக் கருத்தரங்கு இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டத்தினுல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இணுவில் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

## மரண அறிவித்தல்

### வே. ஐயாத்துரை ஜே. பி.

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்கானையைச் சேர்ந்த வே. ஐயாத்துரை J. P. (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானுர் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (24-8-85 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்கானை இழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். 222

## மரண அறிவித்தல்

### திருமதி சிசிலிய முத்தம்மா ஆசீர்வாதம்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச்சேர்ந்த சிசிலிய முத்தம்மா காலமானுர் இவர் இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆசீர்வாதத்தின் அன்பு மனைவியும். போலின், அருமைநாயகம் (கனடா) சாள்ஸ் முகமட் அலி) மருதநாயகம் [கனடா) அருள்நாயகம் முன்னுள் வர்த்தகவங்கி உத்தியோகத்தர், தற்போது (U, S A.), மனே (கனடா), சவுந்தரநாயகம் (சாம்பியா), கனகநாயகம் [U.K] ஆகியோரின் அன்புத் தாயாரும் மாக்கிறேட், இரத்தினம் ஆகியோரின் சகோதரியும் கிறிஸ்டி. ராஜேஸ்வரி, நவம், யூலியட் (கனடா) வனஜா (U S A.] குமாரி [கனடா) பிறேமினி [சாம்பியா], யூலியானு U K] ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு அன்னரின் இல்லத்திலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதி புனித சங்கசுவான் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பூசைக்குப்பின் புனிதகொன்செஸி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். 14/2 கோவில் வீதி, யாழ்ப்பாணம். 227

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சின்னத்தம்பி

பருத்தித்துறை நாகர்கோவில் வடக்கு முருகையர் தேவஸ்தான தர்மகர்த்தாவும் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்டுமாகிய சுப்பிரமணியம் சின்னத்தம்பி காலமானுர் இவர் சிதம்பரப்பிள்ளை சாவித்திரியின் அன்புக் கணவரும், விஜயநாதன், விஜயதாசன் (ஜெர்மனி) விஜயாம்பிகை விஜயகுமாரன் (பிரான்ஸ்) விஜயநந்தினி விஜயரஞ்சன் ஆகியோரின் தந்தையும் சின்னத்துரை சந்திரலிங்கம் (குவைத்) விஜயநாதன் சிவயாகம் (அரசினர் வைத்தியசாலை பருத்தித்துறை] விஜயதாசன்ரூபா [ஜெர்மனி] ஆகியோரின் மாமனுமாவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து சனிக்கிழமை (24-8-85) பிற்பகல் 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சின்னத்தம்பி, விஜயநாதன், மகன். 226

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,